# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI

| | | |
|---|---|---|
| Case Number | | CC No.391/2017 |
| Deposition of witness | | PW- 2/LW 9 |
| Name | | திரு. செந்தில்குமார் |
| Father's/ Name | | திரு. ராமச்சந்திரன் |
| Village | | பூவனூர் |
| Taluk | | நீடாமங்கலம், திருவாரூர் |
| Age | | 56/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11rd day of March 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு.அகிலன் Junior Assistant என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது நாகப்பட்டினம் கீழ்வேளுர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த கோவிந்தசாமி SSI என்பவரின் கையெழுத்து பரிசீட்சையம் என்பதாலும், ஆவணங்களின் அடிப்படையிலும் அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 19.09.2010 அன்று இரவு 21.00 மணிக்கு கோவிந்தசாமி நிலைய பொறுப்பில் இருந்த போது ராஜப்பன் என்பவர் நிலையம் வந்து கொடுத்தபுகார் மனுவை பெற்று காவல் நிலைய குற்ற எண்.249/2010, ச/பி. 147,341,294(b),336,153(A), 506(2) இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை வழக்கு பதிவு செய்துள்ளார். அவர் பெற்ற புகார் மனு **அ.சா.ஆ** 2 ஆகும். அவர் பதிந்த முதல் அச்சு தகவல் அறிக்கை **அ.சா.ஆ.**3 ஆகும். பின்பு வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு நான் 19.09.2010 இரவு 21.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் குணசேகர், முத்துகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் **அசாஆ**4 மற்றும் மாதிரிவரைப்படம் **அசாஆ**5 ஆகும். பின்பு பார்வை மகசர்

சாட்சிகள் குணசேகர், முத்துகிருஷ்ணன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவ சாட்சிகள் ராஜப்பன், சண்முகம், பழனிவேல், ரகுபதி, பிரகாரன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சாட்சிகள் சம்பவத்தைப்பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் என் வாக்குமூலத்தில் உள்ளபடி கூறினார்கள். மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், புலன் விசாரணையிலிருந்தும், வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரிகளை கைது செய்ய தேடியபோது பெரியபள்ளிவாசல் அருகே நின்று அவுரங்சிப், ராஜாமுகமது, சையது, காஜாமொய்தின், சுல்தான் என்கிற முகமது சுல்தான், அப்துல் ஹக்கிம், ஜபருல்லா அன்று 01.30 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி எதிரிகளை கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 1, 5 மற்றும் 6 எதிரிகள் மதுரை உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இறுதியாக இந்த வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது ச/பி. 147,341,294(b),336,153(A), 506(2) இதச பிரிவுகள் படி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாதியிடம் தவறான தகவலை பெற்று பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை